தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி இன்று மாலை சென்னையில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

2. ஆண்டுக்கு இரண்டு கோடி வேலைவாய்ப்புகளை அளிப்பதாக கூறிய உறுதிமொழியை பிஜேபி நிறைவேற்றவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் திரு டி ராஜா கூறியுள்ளார்.

3. ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனில் தமிழக அரசியல் கட்சிகள் பேசுவதற்கான நேரம் இன்று குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

4. முன்னாள் தமிழக அமைச்சர் திரு ஆர் எம் வீரப்பன் இன்று சென்னையில் காலமானார்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் தமிழகம் உள்ளிட்ட முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அதிகரித்து வரும் கோடை வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் அரசியல் கட்சியினர் தேர்தல் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி பிரச்சாரம் மேற்கொள்வதற்காக இன்று மாலை சென்னை வந்தடைந்தார்.

இன்று மாலை தியாகராயநகரில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்ட பேரணியில் பிரதமர் பங்கேற்கிறார்.

முன்னதாக இன்று காலை மத்திய பிரதேச மாநிலம் பாலாகட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், வரும் மக்களவைத் தேர்தல் புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான இயக்கம் என்று குறிப்பிட்டார்.

நகர்புறங்களிலும், கிராமப்பகுதிகளிலும் உள்ள ஒவ்வொருவருக்கும் முக்கியத்துவம் அளித்து தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த பத்து ஆண்டுகள் நலத்திட்டங்களை அளித்து வந்ததாக அவர் தெரிவித்தார்.

நவீன உள்கட்டமைப்பை நாடு முழுவதும் கொண்டு வருவதற்கான பல கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஷெடியூல்டு வகுப்பு மக்களுக்கு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்க காங்கிரஸ் கட்சி தவறிவிட்டதாகவும் திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

ஆண்டுதோறும் இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக உறுதியளித்த பிஜேபி அதனை நிறைவேற்றவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு டி ராஜா கூறியுள்ளார்.

விழுப்புரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் நிதி வசூலித்ததன் மூலம் அக்கட்சி மிகப்பெரிய முறைகேட்டில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டினார்.

தேர்தல் பறக்கும் படையினர் கைப்பற்றும் தொகையை தேர்தல் ஆணையம் யாருடையது என கண்டறிந்து தேர்தல் ஆணையம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அனைத்து விஷயங்களிலும் நடுநிலையோடு அந்த அமைப்பு செயல்பட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளாக மத்தியில் ஆட்சி புரிந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மாநிலங்களுக்கான உரிமையை அளிக்கவில்லை என்றும், பேரிடர் காலங்களில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு உதவி செய்யவில்லை என்றும் திரு டி ராஜா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இதனிடையே மாவட்ட நிர்வாகங்கள் தேர்தல் தொடர்பான முன்னேற்பாட்டு பணிகளையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன.

சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவு மையங்களில் பணிபுரிய உள்ள காவல் பணியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களை குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் ராதாகிருஷ்ணன் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் சின்னம் பொருத்தும் பணி அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

நாமக்கல் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை கணினி மூலம் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்வதற்கான இரண்டாவது கட்டப்பணி அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தலைமை அஞ்சலகம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறிதது, துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தும் வகையில் திருச்சி ரயில் நிலையத்தில் அஞ்சலக ஊழியர்கள் பிரமாண்ட ரங்கோலி கோலமிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாட்டுப்புற கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தூத்துக்குடி வ உ சி சிதம்பரம் கல்லூரியில் முதல் முறை வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து ராட்சத பலூன் பறக்கவிட்டு விழிப்பணர்வு ஏற்படுத்தப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து கிராமிய கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில் பங்கேற்ற ஆட்சியரும், தேர்தல் அதிகாரியுமான திரு அருண்ராஜ், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் பதற்றமான வாக்குசாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் அருகே ஏ டி எம் மையங்களில் நிரப்ப உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட 47 லட்சத்து 50 ஆயிரம்ரூபாயை பறக்கும் படையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே தனியார் ஏ டி எம் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட 74 லட்சத்து ஐயாயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

**[]<<<>>>[]**

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது சிதம்பரம் மக்களவைத் தொகுதி

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலையொட்டி ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனில் தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு ஒலி ஒளிபரப்புக்கான தேதி மற்றும் நேரம் குலுக்கல் முறையில இன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாஹூ முன்னிலையில் இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரஸார் பாரதியின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இம்மாதம் 12, 13, 15, 16 ஆகிய தேதிகளில் இந்த தேர்தல் ஒலிபரப்பு இடம்பெறும்.

கோடை பண்பலை உட்பட தமிழகத்தில் உள்ள வானொலி நிலையங்களின் அனைத்து அலைவரிசைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தேர்தல் ஒலிபரப்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வானொலி ஒலிபரப்பில் திமுக, அஇஅதிமுக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ், பாரதீய ஜனதாக்கட்சி, காங்கிரஸ், பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகளின் ஒலிபரப்புக்கான தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

எம் ஜி ஆர் கழக நிறுவனரும், முன்னாள் மாநில அமைச்சருமான திரு ஆர் எம் வீரப்பன் இன்று பிற்பகல் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 98.

மூத்த அரசியல்வாதியான திரு ஆர் எம் வீரப்பன், வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிசிக்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

எம் ஜி ஆர் மற்றும் ஜெயலலிதா ஆட்சியின்போது தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மூத்த அரசியல் தலைவராவராக அவர் திகழ்ந்தார்.

1995-ஆம் ஆண்டு எம் ஜி ஆர் கழகம் என்ற அரசியல் கட்சியை அவர் தொடங்கினார்.

அரசியல் மட்டுமன்றி தமிழ் திரைப்படத் தயாரிப்பாளராக அவர் பல திரைப்படங்களை தயாரித்துள்ளார்.

பழம்பெரும் நடிகர்கள் எம் ஜி ஆர், சிவாஜிகணேசன் மற்றும் காமல்ஹாசன், ரஜினிகாந்த் உள்ளிட்டோர் நடித்த ஏராளமான திரைப்படங்கள் ஆர் எம் வீரப்பன் தயாரிப்பில் வெளிவந்துள்ளன.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தனியார் மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆர் எம் வீரப்பன் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

**[]<<<>>>[]**

விளையாட்டுச் செய்திகள் -

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

மொகாலியில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டி சீனாவில் இன்று தொடங்கியது.

***End of News***